முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான் ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1438

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**06.09.2023,** புதன்கிழமை

1. அறமோடு உலகோர்க்கு வரம் தந்து
அற்புதம் நிகழ்த்துகின்ற அரங்கா வாழ்க
வரமாக சுப்ரமணியர் யானும் இனிதே
வழங்குவேன் உந்தனுக்கு ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் ஆவணி மாதம் 20 ம் நாள், 06.09.2023 புதன் கிழமை)
2. ஆசி தனில் அரங்கன் பலம் கூடிடவும்
அறத்தின் பலம் இன்னும் பெருகிடவும்
வாசிவென்ற ஞானியர்படைகள் வையகத்தில்
வல்லமைபட அரங்கன் உன்னால் உருவாகிடவும்
3. ஆகவே சுப்ரமணியர் யானும் அருளுவேன்
தொடர்ந்து ஞான அறிவுரை ஆசி
ஆற்றல்பட உன் தொண்டர்படைக்கு
அற்புதத்தை கலியினில் ஆறுமுகன் யான்
4. தேக்கமின்றி வரமாக தந்தருள்வேன்
தொண்டுசெய்து உன் தர்மத்தை காக்கின்ற
காக்கின்ற தொண்டர்களே இந்த
கலியுகத்தின் சிறந்த ஞானவான்களாகும்
5. ஆகவே அவர்கள் கொண்டு தான் அற்புதத்தை
அகிலத்தில் ஆறுமுகன் யான் நடத்த உள்ளேன்
வரமாக தொடருகின்ற
வல்லமையான தொண்டர்கள் அனைவருக்கும்
6. திறம்பட தேகமனபலம் கூட்டி தேட்டுதனவளமோடு
கட்டமான நிலைகள் பற்றாத வண்ணம்
கலியினில் சர்வகாப்புத் தந்து
திட்டமுடன் உன் தொடர்பாலே அவர்கட்கு

7. தெய்வீக நிலை கூட்டி ஆறுமுகன் யான்
அவர்கள் வழியே அமைந்துள்ள
அரங்கன் கிளைச் சங்கத்தின் வழியே
வகையான வரங்கள் எங்கும் வழங்கி

8. வல்லமைகூட்டி அரங்கன் நாமஜெபம் சொல்லும் இடமெல்லாம்
ஆறுமுகன் யான் அற்புதத்தை நடத்துகின்றேன்
அன்னதனால் அரங்கன் வழிதொடரும்
அன்பர்களுக்கே இந்த அற்புத வாய்ப்பு

9. அதன் வழி தொடர்ந்து வருகவருக
ஆக்கமும் நல்ல மாற்றமும் உலகமெங்கும் ஞானவழி நல்ல தேற்றமும்
ஆளுமைக்கே மாறுதலைத் தரும் அதிசயமும்
அரங்கன் தொண்டர்படை கொண்டு உருவாக்குவேன்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–